**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.133/2025**
**LW- 3 as Examined PW- 3**

| | |
|---|---|
| Name: கண்ணகி | Age: |
| Father's Name: குமார்<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 17.03.2026 | |

**17.03.2026**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 12.40 PM**

**அ.சா. 3 – முதல் விசாரணை**

நான் புலிபாக்கத்தில் உள்ள மாட்டு பண்ணையில் தற்போது வேலை செய்கிறேன். கடந்த ஒருவருடத்திற்கு முன்பாக சாலவாக்கத்தில் உள்ள மாட்டு பண்ணையில் நானும் என்னுடைய கணவர் குமார் வேலை செய்துவந்தோம். அ.சா.1 ரபிக் என்பவர் தான் மேற்படி மாட்டு பண்ணையின் ஓனர் ஆவார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக நீதிமன்ற ஆஜர் எதிரி மதுபோதையில் மேற்படி மாட்டு பண்ணைக்கு வந்து சத்தம் போட்டார். மேலும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டு இருந்த மேற்படி ஓனரின் ஸ்கூட்டி வாகனத்தை எடுக்க முயன்றார். அப்போது அங்கு வந்த மேற்படி ஓனர் ரபிக் ஏன் என்னுடைய வண்டியை எடுக்கிறாய் என்று ஆஜர் எதிரியிடம் கேட்டார். அப்போது வாய் தகராறு ஏற்பட்டது. உடனே ஆஜர் எதிரி எங்கள் ஓனர் ரபிக்கை அவரது கன்னத்தில் அடித்துவிட்டார். சம்பவம் குறித்து புகார்அளிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் நாங்கள் பணிபுரிந்து வரும் மாட்டு பண்ணை அருகில் விசாரணை செய்தார்கள். எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவதன்றே விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் ஆஜர் எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் தான் வந்து ஓனர் ரபிக்கின் வாகனத்தை எடுத்தார். அதனால் அடையாளம் தெரியும். அவரது பெயர் விவரங்கள் நான் போலிசார் விசாரணையின் போது தெரிவித்தேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையின் போது என்னுடைய முதல் விசாரணையில் தெரிவித்தபடி ஆஜர் எதிரி மதுபோதையில் இருந்த விவரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்வதை எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் நானும் என்னுடைய கணவர் மற்றும் ரபிக் இருந்தார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய கணவரும் ஜெயராமனும் புகார் அளிக்க சென்றார்கள். ஆஜர் எதிரி எங்கிருந்தார் என்றால் போலிசார் பண்ணைக்கு வரும்வரை அவர் அங்கு தான் இருந்தார். போலிசார் வந்துதான் அவரை அழைத்து சென்றார்கள். இருசக்கர வாகனம் அங்கு தான் சாவியுடன் இருந்தது என்றால் சரிதான். நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் என்னுடைய ஓனருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.50 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**

**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE</u>**

**<u>UTHIRAMERUR.</u>**

**CC. No.133/2025**
**LW- 2 as Examined PW- 2**

| | |
|---|---|
| Name: குமார் | Age: |
| Father's Name: சுப்பிரமணி<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 17.03.2026 | |

**<u>17.03.2026</u>**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 12.30 PM**

**அ.சா. 2 – முதல் விசாரணை**

நான் புலிபாக்கத்தில் உள்ள பாலாறு மாட்டு பண்ணையில் கூலிவேலை செய்கிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக நான் சாலவாக்கத்தில் உள்ள மாட்டு பண்ணையில் வேலை செய்து வந்தேன். மேற்படி மாட்டு பண்ணை சென்னையில் உள்ள ரபிக் என்பவருக்கு சொந்தமானது. மேற்படி மாட்டு பண்ணையில் நானும் என்னுடைய மனைவி கண்ணகியும் வேலை செய்து வந்தோம். சுமார் 11 மாதங்களுக்கு முன்பு நானும் எனது மனைவியும் மேற்படி மாட்டு பண்ணையில் இருந்தபோது சுமார் மதியம் 3.00 மணிக்கு நீதிமன்ற ஆஜர் எதிரி மேற்படி மாட்டு பண்ணைக்கு வந்தார். அவரின் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆஜர் எதிரி அங்கு வந்து பண்ணையில் உள்ள ஸ்கூட்டி வாகனத்தை எடுத்தார். நான் என்னவென்று கேட்டபோது மேற்படி வாகனம் தன்னுடையது என்று என்னிடம் கூறினார். மேற்படி மாட்டு பண்ணையின் ஓனர் ரபீக் அங்கு வந்து மேற்படி ஸ்கூட்டி வாகனம் தன்னுடையது என்று நீதிமன்ற ஆஜர் எதிரியிடம் கூறினார். உடனே ஆஜர் எதிரி ரபீக்கை கையால் ரபீக்கின் தாடையில் அடித்துவிட்டார். சம்பவம் குறித்து புகார்

அளிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சுமார் 3.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்திற்கு எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் நானும் ஜெயராமனும் சென்றோம். எதற்காக காவல் நிலையம் சென்றோம் என்றால் புகார் அளிப்பதற்காக காவல் நிலையம் சென்றோம். புகாரினை யார் கொடுத்தது என்றால் ஜெயராமன் என்பவர் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. மாட்டு பண்ணையில் எத்தனை நபர்கள் இருந்தோம் என்றால் இரண்டு நபர்கள் இருந்தோம். நானும் என்னுடைய மனைவியும். நான் என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாகனத்தை யாரும் எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சாலவாக்கம் மாட்டு பண்ணையில் வேலை செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.40 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**